# அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் மயிலாப்பூர், சென்னை 04.
## வேலை வாய்ப்பு அறிவிப்பு
## ந.க எண்.550/2025/அ1 / நாள். 26.11.2025

சென்னை 04, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் காலியாக உள்ள கீழ்காணும் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்புவதற்கு 01.07.2025 அன்று 18 வயது பூர்த்தி அடைந்தவராகவும், 45 வயதிற்கு உட்பட்டவராகவும், தகுதியுடைய இந்து மதத்தைச் சார்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**காலிப்பணியிட விவரம்**

| வ. எண் | பதவியின் பெயர் | காலி பணியிடம் | சம்பள விகிதம் | கல்வித்தகுதி |
|---|---|---|---|---|
| 1 | உதவி பொறியாளர் (சிவில்) | 1 | Level–35 Matrix–1 36,700 – 1,16,200 | கட்டட பொறியியலில் பொறியியல் இளநிலைப் பட்டம் (அ) பொறியாளர்களுக்கான கல்வி நிறுவனத்தில் (இந்திய நிறுவனம்) பிரிவு ஏ மற்றும் பி–இல் தேர்ச்சி பெற்றிருப்பதுடன் கட்டட பொறியியலை ஒரு பாடமாக பயின்றிருக்க வேண்டும். |
| 2 | இளநிலை உதவியாளர் | 2 | Level–22 Matrix–1 18500 – 58600 | பத்தாம் வகுப்பு தேர்ச்சி (அ) அரசால் அங்கீகரிக்கப்பட்ட அதற்கு இணையான கல்வித்தகுதி பெற்றிருக்க வேண்டும். |
| 3 | சீட்டு விற்பனையாளர் | 3 | Level–22 Matrix–1 18500–58600 | 1) பத்தாம் வகுப்பு தேர்ச்சி அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட அதற்கு இணையான கல்வித்தகுதி மற்றும் 2) அரசு தொழில்நுட்ப தட்டச்சர் தேர்வில் தட்டச்சு தேர்ச்சி பெற்றிருத்தல்.<br>(i) தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் முதுநிலை (அல்லது) (ii) தமிழில் முதுநிலை மற்றும் ஆங்கிலத்தில் இளநிலை (அல்லது) (iii) ஆங்கிலத்தில் முதுநிலை மற்றும் தமிழில் இளநிலை. ஆனால் இனம் (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதியை விண்ணப்பதாரர் பெறாத நேர்வில், இனம் (ii) இல் அல்லது (iii) இல் உள்ள தகுதிகளைக் பெற்ற விண்ணப்பதாரர்கள் மேற்சொன்ன முன்னுரிமை வரிசையில் நியமிக்கப்படலாம் கணினி பயன்பாடு மற்றும் அலுவலகத் தானியக்கத்தில் சான்றிதழ் படிப்பில் தேர்ச்சி அல்லது அதற்கு இணையான அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |
| 4 | தமிழ் புலவர் | 1 | Level–22 Matrix–1 18500–58600 | 1) யாதொரு பல்கலைகழகத்தில் அல்லது அதற்கு இணையான தமிழில் B.Lit அல்லது B.A. அல்லது M.A. அல்லது M.Lit. பட்டம் கல்வித்தகுதி பெற்றிருத்தல் மற்றும் 2) திருமுறைகள் ஒப்புவித்தலில் திறன் பெற்றிருத்தல். |
| 5 | உதவி மின்பணியாளர் | 2 | Level–18 Matrix–1 16600–52400 | 1) அரசால் / அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் வழங்கப்பட்ட மின்/மின் கம்பிப் பணியாளர் தொழிற் பயிற்சி நிறுவனச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.<br>2) மின் உரிமம் வழங்கல் வாரியத்திடமிருந்து "H" சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். |
| 6 | பாரா | 6 | Level–17 Matrix–1 15900–50400 | தமிழில் படிக்க மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | குருக்கள் அர்ச்சகர் (நிலை 2) உபகோயில் | 1 | Level–12 Matrix–1 11600–36800 | 1) தமிழில் படிக்க மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும். மற்றும் 2) யாதொரு சமய நிறுவனங்களால் அல்லது அரசு நிறுவனங்களால் அல்லது ஏனைய யாதொரு நிறுவனத்தால் நடத்தப்படும் ஆகமப் பள்ளி அல்லது வேதபாட சாலையில் தொடர்புடைய துறையில் ஓராண்டு படிப்பினை மேற்கொண்டதற்கான சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும். |
| 8 | காவலர் | 1 | Level–12 Matrix–1 11600–36800 | தமிழில் படிக்க மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும். |
| 9 | உதவி பரிச்சாரகர் | 2 | Level–10 Matrix–1 10000–31500 | தமிழில் படிக்க மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும். மற்றும் 2) கோயில்களின் வழக்கங்களுக்கேற்ப நெய்வேத்யம் மற்றும் பிரசாதம் தயாரிக்கத் தெரிந்திருக்க வேண்டும். |

விண்ணப்ப படிவம், தகுதிகள் மற்றும் இதர விவரங்களை www.hrce.tn.gov.in மற்றும் https://mylaikapaleeswarar.hrce.tn.gov.in என்ற திருக்கோயில் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய தகுதிச்சான்றுகளுடன் நேரடியாகவோ, தபால் மூலமாகவோ 27.11.2025 தேதி முதல் 28.12.2025 தேதி வரை மாலை 5.45 மணிக்குள் திருக்கோயில் அலுவலகத்தில் கொடுக்க வேண்டும். மேற்படி தேதிக்கு முன்னதாகவோ அல்லது பின்னதாகவோ வரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :** இணை ஆணையர்/ செயல் அலுவலர்,
அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில்,
மயிலாப்பூர், சென்னை–600 004.

திருமதி. பெ.க.கவெனிதா, பி.ஏ., பி.எல்., எம்.எச்.ஆர்.எம்.,
இணை ஆணையர் /செயல் அலுவலர்

திரு.P.விஜயகுமார் ரெட்டி
அறங்காவலர் குழுத் தலைவர்

அறங்காவலர்கள்

திருமதி. ரஞ்ஜினி மணியன், திரு.ப. திருநாவுக்கரசு, திரு.M. P. மருதமுத்து, திரு. C.T. ஆறுமுகம்

# நிபந்தனைகள்

1. விண்ணப்பதாரர் 01.07.2025–ம் தேதி அன்று 18 வயது பூர்த்தியடைந்தவராகவும், 45 வயதுக்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
2. இந்து மதத்தைச் சார்த்தவராகவும், இறை நம்பிக்கை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
3. ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்.
4. இவ்விளம்பரம் செய்யப்பட்ட தேதிக்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.
5. விண்ணப்பத்துடன் கல்வித் தகுதிக்குரிய சான்றிதழ்கள் மற்றும் கூடுதல் கல்வித்தகுதிக்கான சான்றிதழ்கள் மற்றும் ஆதார், வாக்களார் அடையாள அட்டை, குடும்ப அட்டை போன்ற பிற ஆவணங்களுக்கு அரசிதழ் பதிவுபெற்ற அலுவலரிடம் சான்றொப்பம் (Attested Xerox copy only) பெற்று அனுப்பப்பட வேண்டும்
6. விண்ணப்பதாரர் வயதிற்கான சான்று ஆவணம் அல்லது கல்வி நிலையத்தால் வழங்கப்பட்ட மாற்று சான்றிதழ் (Transfer Certificate) நகல் இணைக்கப்பட வேண்டும்.
7. விண்ணப்ப படிவத்தில் விவரங்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்படாமலும், கேட்கப்பட்ட சான்று நகல்கள் இணைக்கப்படாமலும், பெறப்படும் விண்ணப்பங்கள் ஆரம்ப நிலையிலேயே நிராகரிக்கப்படும்.
8. தேர்ந்தெடுக்கப்படும் பணியாளர் இத்திருக்கோயிலின் உபகோயில்களுக்கும், உபநிறுவனங்களுக்கும் பணியிட மாறுதல் செய்யப்படுவார்.
9. பணிக்கு தேர்வாகும் விண்ணப்பதாரர் பணியில் சேர வரும் நேரத்தில் விண்ணப்பதாரர் வசிக்கும் எல்லைக்கு உட்பட்ட காவல் நிலையத்தில் விண்ணப்பதாரர் மீது குற்றவியல் நடவடிக்கை ஏதும் இல்லை என்ற சான்றிதழ் மற்றும் உடல் தகுதி சான்றிதழ்களின் அசல் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
10. விண்ணப்பங்களை அனுப்பும் போது மேல் உறையின் மீது பதவியின் பெயரை குறிப்பிட்டு நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ அனுப்பப்பட வேண்டும்.
11. நேர்முக தேர்வில் கலந்து கொள்வதற்கு எவ்வித பயணப்படியும் வழங்கப்படமாட்டாது.
12. விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் கல்வி தகுதி மற்றும் பிற தகுதிக்குரிய ஆவணங்களின் அசல் சான்றிதழ்கள் நேர்முக தேர்வின் போது கண்டிப்பாக கொண்டு வரப்பட வேண்டும்.
13. விண்ணப்பதாரரால் தெரிவிக்கப்படும் விவரங்கள் அனைத்தும் சரியானவை என உறுதியளிக்க வேண்டும். தவறான தகவல்கள் அல்லது போலியான ஆவணங்கள் ஏதேனும் அளித்து பணி நியமன ஆணை பெறப்படும் பட்சத்தில் எவ்வித முன் அறிவிப்புமின்று பணி நீக்கம் செய்தும், சட்ட ரீதியான குற்றவியல் நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப்படுவர்.
14. நிர்ணயிக்கப்பட்ட காலகெடுவிற்குள் பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படும். மேலும் தகுதியான விண்ணப்பதாரர்கள் மட்டுமே பரிசீலனைக்கு பின்னர் நேர்முக தேர்விற்கு அழைக்கப்படுவர். தகுதி இல்லாத விண்ணப்பங்களுக்கு திருக்கோயிலிருந்து எவ்வித தகவலும் அனுப்பப்படமாட்டாது.
15. விண்ணப்பதாரர்களால் வழங்கப்படும் சான்றுகள் அனைத்தும் சம்மந்தப்பட்ட துறைகளின் மூலம் உண்மைத் தன்மை குறித்து பரிசீலனைக்கு உட்படுத்தப்படும்.
16. அரசு பணி மற்றும் பொது நிறுவனங்கள், இதர திருக்கோயில்களில் பணிபுரிந்து தண்டனை காரணமாக பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.
17. உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் சான்றிதழ் நகல்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் காரணம் தெரிவிக்கப்படாமல் நிராகரிக்கப்படும்.
18. பணி நியமனம் அரசாணை எண்.114 சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அ.நி.4–2) நாள்.03.09.2020 விதிகளுக்குட்பட்டது. அரசாணை எண்.219 சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அ.நி.4–2) நாள்02.09.2022 விதிகளுக்குட்பட்டது.
19. அரசாணை (நிலை) எண்.114 சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அ.நி.4–2) நாள்.03.09.2020 விதி எண்.9–ன்படி முதுநிலை அல்லாத திருக்கோயில்களில் பணிபுரியும் தகுதியான பணியாளர்கள் விண்ணப்பிக்கலாம்.

20. தேர்வு முறையானது அடிப்படை கல்வித் தகுதி, அனுபவம்,செயல்முறை தேர்வுகள், கூடுதல் தகுதி மற்றும் நேர்முக தேர்வு ஆகியவற்றில் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் நடைபெறும்.
21. விண்ணப்ப படிவத்தினை www.hrce.tn.gov.in மற்றும் https://mylaikapaleeswarar.hrce.tn.gov.in என்ற திருக்கோயில் இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அல்லது திருக்கோயில் அலுவலகத்தில் ரூ.50/- செலுத்தி விண்ணப்பத்தினை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
22. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய சான்றுகளுடன், அஞ்சல் உறையில் பணியிட வரிசை எண். மற்றும் "……………………………………….பணியிடத்திற்கான விண்ணப்பம்" என தெளிவாக குறிப்பிட்டு "இணை ஆணையர் / செயல் அலுவலகர், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில், மயிலாப்பூர், சென்னை-600 004" என்ற முகவரிக்கு நேரிலோ / அஞ்சல் மூலமாகவோ அனுப்ப வேண்டும். மேலும் ரூ.75/- மதிப்புள்ள அஞ்சல் வில்லை ஒட்டிய சுயவிலாசமிட்ட ஒப்புகை அட்டையுடனும் அஞ்சல் உறையுடனும் இணைத்து அனுப்ப வேண்டும்.
23. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள். 28.12.2025 பிற்பகல் 5.45 மணிக்குள்.

திருமதி. பெ.க.கவெனிதா, பி.ஏ., பி.எல்., எம்.எச்.ஆர்.எம்.,
இணை ஆணையர் /செயல் அலுவலர்

திரு.P.விஜயகுமார் ரெட்டி
அறங்காவலர் குழுத் தலைவர்

அறங்காவலர்கள்

திருமதி. ரஞ்ஜினி மணியன், திரு.ப. திருநாவுக்கரசு, திரு.M. P. மருதமுத்து, திரு. C.T. ஆறுமுகம்

**விண்ணப்ப படிவம்**

<table>
<tr><td colspan="3">விண்ணப்பிக்கும் திருக்கோயில் பெயர்:<br>இணை ஆணையர்/ செயல் அலுவலர்,<br>அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில்,<br>மயிலாப்பூர், சென்னை –4.</td><td>சமீபத்தில் எடுக்கப்பட்ட பாஸ்போர்ட் அளவு புகைப்படம்</td></tr>
<tr><td>1</td><td>பெயர்</td><td colspan="2"></td></tr>
<tr><td>2</td><td>தந்தை பெயர்</td><td colspan="2"></td></tr>
<tr><td>3</td><td>விண்ணப்பிக்கும் பதவி</td><td colspan="2"></td></tr>
<tr><td>4</td><td>தற்போதைய முகவரி</td><td colspan="2"></td></tr>
<tr><td>5</td><td>நிலையான முகவரி</td><td colspan="2"></td></tr>
<tr><td>6</td><td>தொடர்புக்கான தொலைபேசி/ கைபேசி எண்.</td><td colspan="2"></td></tr>
<tr><td>7</td><td>தேசிய இனம்</td><td colspan="2"></td></tr>
<tr><td>8</td><td>சமயம்</td><td colspan="2"></td></tr>
<tr><td>9</td><td>பிறந்த தேதி மற்றும் வயது</td><td colspan="2"></td></tr>
<tr><td>10</td><td>கல்வித் தகுதி</td><td colspan="2"></td></tr>
<tr><td>11</td><td>விண்ணப்பிக்கும் பதவிக்கான சிறப்பு தகுதிகள்</td><td colspan="2"></td></tr>
<tr><td>12</td><td>முன் அனுபவம்</td><td colspan="2"></td></tr>
<tr><td>13</td><td>நன்னடத்தை சான்று அளித்தவர் பெயர், தகுதி, முகவரி</td><td colspan="2"></td></tr>
<tr><td>14</td><td>பணி தொடர்புடைய குறிப்பான தகவல் ஏதேனும்</td><td colspan="2"></td></tr>
</table>

மேற்குறித்த விவரங்கள் அனைத்தும் உண்மையானவை என உறுதி அளிக்கிறேன்.

விண்ணப்பதாரர் கையொப்பம்

**இணைப்பு :**
1. வயது சான்றிதழ் நகல் (Transfer Certificate)
2. கல்வி தகுதி சான்றிதழ் நகல்
3. கூடுதல் கல்வி தகுதிக்கான சான்றிதழ் நகல்
4. ஆதார் நகல்
5. வாக்காளர் அட்டை நகல்
6. குடும்ப அட்டை நகல்
7. ரூ.75/– மதிப்புள்ள அஞ்சல் வில்லை ஒட்டிய சுயவிலாசமிட்ட ஒப்புகை அட்டையுடனும் அஞ்சல் உறை

இடம் :
தேதி :